RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2211

# தொல்காப்பியக் களவும் புறமண முறையும்

த. திருப்பதி [அ, *], ப. வேல்முருகன் [அ]

[அ, *] தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப்பல்கலைக்கழகம், திருவாரூர்-610005, தமிழ்நாடு, இந்தியா

# Tolkappiyam’s courtship and exogamy

D. Thirupathi [a, *], P. Velmurugan [b,]

[a] Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur-610005, Tamil Nadu, India.

* Corresponding Author:
thirumarxad@gmail.com

Received: 28-05-2021
Revised: 30-10-2021
Accepted: 02-11-2021
Published: 17-11-2021

Check for updates

**ABSTRACT**

The human race has gone through various transformations. It also presented impediments to sexual activity. People lived in groups and had their sexual relations inside them throughout the prehistoric period. Simultaneously, there was promiscuous intercourse. The clan was then created as a result of many external developments in society that resulted in the restriction of promiscuous relations. Because the father's identity is unknown, the descent was calculated using the mother's line. Endogamy was forbidden in clans, while exogamy was tolerated. Exogamy was unavoidable over time, and it is also the reason for the Clan's existence. Exogamy was practiced in many countries without protest, whereas endogamy was permitted in India but exogamy was condemned. It's important to figure out why this disagreement exists. First and foremost, we must investigate the following question: ‘In India, which sexual form, endogamy or exogamy, was allowed among the clan?' We can investigate it with the aid of ancient literature. Tolkappiyam, one of the earliest literary masterpieces of the Tamil race in current Indian civilization, is preserved in this fashion. In Tolkappiyam, there were two sexual forms: 'kalavu' and 'karpu.' This paper investigates the concept that the 'kalavu' referenced in Tolkappiyam may represent exogamy from the Marxist perspective through ‘Tolkappiya Poruladhigaram.

**Keywords:** Promiscuous Intercourse, Clan, Endogamy, Exogamy, Caste, Tolkappiyam, Courtship, Marxism, Friedrich Engels, Ambedhkar.

## முன்னுரை

மனிதகுலம் தோன்றிப் பல மாற்றங்களைச் சந்தித்து வந்திருக்கிறது. அந்த மாற்றங்களினூடாக மனிதர்களின் பாலுறவு வடிவங்களிலும் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மனிதர்கள் குழுக்களாக இணைந்தும் தங்கள் குழுக்களிலேயே பாலுறவுக் கொண்டும் வாழ்ந்து வந்தனர். மனிதர்கள் குழுக்களாக இணைந்து வாழ்ந்து வந்த காலக்கட்டத்தில் வரைமுறையற்ற புணர்ச்சி நிலவியது. சமூகத்தில் நிகழ்ந்த புறவய மாற்றங்களினூடாக வரைமுறையற்ற புணர்ச்சியிலிருந்து மெல்ல மெல்ல பாலுறவுத் தடைகள் ஏற்பட்டதன் வாயிலாக ஒரு காலக்கட்டத்தில் குலம் என்பது தோற்றம் கொள்கிறது. ஓர் இனக்குழுவில் ஒருதாய் வயிற்றில் பிறந்தவர்கள், தாய்வயிற்றுச் சொந்தங்கள் (சகோதர - சகோதரிகள், ஒன்றுவிட்ட சகோதர - சகோதரிகள்) பாலுறவுக் கொள்வதில் தடை ஏற்பட்டதன் வாயிலாக ஓர் இனக்குழு சில குலங்களாகப் பிரிகிறது. ஓர் இனக்குழுவில் உள்ள குலங்கள் தங்கள் குலங்களுக்குள்ளேயே பாலுறவுக் கொள்ளும் அகமணமுறையானது கண்டிப்புடன் தடைசெய்யப்படுகிறது. இனக்குழுவில் உள்ள குலங்களில் குறிப்பாகத் தங்கள் குலத்திற்கு வெளியில் பாலுறவினைக் கொள்ளும் புறமணமுறை இக்கால

கட்டத்தில் தவிர்க்க இயலாத விதியாகிறது. இந்தப் புறமணமுறை குலம் நீடித்து நிலைத்திருப்பதற்கான முன்நிபந்தனையாகிறது. குலங்களுக்கிடையோன புறமணமுறை எவ்வித எதிர்ப்புமின்றி சமூக ஏற்புடன் தொடர்வது உலகெங்கிலும் நிகழ, இந்தியச் சமூகத்தில் குலங்களுக்கிடையே அகமணமுறை ஏற்கப்பட்டும் புறமணமுறை எதிர்ப்பிற்குள்ளாகியும் இருக்கின்ற முரண்பாட்டைக் காணமுடிகிறது. இந்த முரண்பாட்டிற்கான காரணங்கள் விரிவாக ஆராய வேண்டியவை. அதன் தொடக்கமாக முதலில் இந்தியச் சமூகத்தில் குலங்களுக்கிடையே ஏற்கப்பட்ட வடிவமாக அகமணமுறை இருந்ததா? இல்லை புறமணமுறை இருந்ததா? என்பதை ஆராய வேண்டியுள்ளது. அதனை ஆராயவும் அறியவும் நமக்கு அகச்சான்றுகளாய் இலக்கியங்களும் இலக்கணங்களும் பெரிதும் துணைபுரிகின்றன. அந்த வகையில் இந்தியச் சமூகத்தில் தனக்கென்று பழமையும் இலக்கிய, இலக்கண வளங்களையும் தனிச்சிறப்புடன் பெற்றுத் திகழும் தமிழினமும் அதன் பழமை ஆவணமான தொல்காப்பியமும் கவனம் பெறுகின்றன. தொல்காப்பியத்தை நோக்க அதில் களவு மணம், கற்பு மணம் என்கிற இருவேறுபட்ட பாலுறவு முறைகள் பதிவாகியுள்ளன. இதில் தொல்காப்பியம் கூறும் களவு மணம் குலங்களுக்கிடையேயான புறமணமுறையில் அமைந்திருக்கலாம் என்கிற கருதுகோளினைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் வழியாக மார்க்சிய வெளிச்சத்தில் இக்கட்டுரை ஆராய்கிறது.

## குலங்களும் புறமணமுறையும்

ஆதிகாலத்தில் “மனித குல வரலாற்றின் வழி நோக்குங்கால், தங்கள் இனத்தை ஏனைய கொடிய விலங்குகளின் தாக்குதலினின்று காப்பாற்றிக் கொள்ளவும் இயற்கையின் கொடிய விளைவுகளில் இருந்து தப்பவும் மனிதர் ஆதியிலிருந்தே இணைந்த குழுக்களாகத்தான் திரிந்தனர்” என்பர் (Rajam Krishnan, 2014).

ஆதிகாலத்தில் நிலவிய இனக்குழு வாழ்க்கையைப் பற்றி இனவரைவியலாளர்களும் மானுடவியலாளர்களும் ஆராய்ந்துள்ளனர். இனக்குழுவாக வாழ்ந்த போது ஏற்பட்ட மணத்தடைகளால் (சகோதர - சகோதரிகளுக்கிடையிலான மணத்தடை) ஒரு இனக் குழுவிற்குள்ளாகவே சில குலங்கள் தோன்றின. இந்தக் குலங்களே குடும்பத்தின் ஆதி வடிவம் எனும் மார்கனின் கருத்தை எடுத்துக்காட்டுகிறார் எங்கெல்ஸ் (Friedrich Engels, 2011). சமூகத்தில் ஏற்பட்ட மணத்தடைகள் இறுக்கமாகிக் கொண்டே சென்றதனால், குலங்களில் உள்ளோர் தங்கள் குலத்திற்குள்ளேயே மணம் செய்வதற்குத் தடை ஏற்படுகிறது. ஒரு குலத்தில் உள்ளோர் மற்றொரு குலத்தில் உள்ளவர்களை மட்டுமே மணக்க வேண்டும் என்பது சமூக விதியாகிறது இதனால்,

- அகமணமுறை
- புறமணமுறை என்கிற இரண்டு பாலுறவு வடிவங்கள் (மணவடிவங்கள்) தோற்றம் கொள்கின்றன.
- அகமணமுறை என்பது தமது இனக்குழுவிற்குள்ளாகவும், தனது குலத்திற்குள்ளாகவும் மணந்து கொள்வதாகும்.
- புறமணமுறை என்பது மற்றொரு குழுவிற்குள்ளாகவும், குலத்திற்குள்ளாகவும் மணந்து கொள்வதாகும்.
- ஓர் இனக்குழுவை நோக்க அதில் வெவ்வேறு குலங்கள் இருக்கின்றன. குலங்களாகப் பார்க்கின்றபோது வெவ்வேறானதாகவும், இனக்குழுவாகப் பார்க்கின்றபோது ஒன்று பட்டதாகவும் இருப்பதனால் ஒரே இனக்குழுவிற்குள்
- இனக்குழுவை நோக்க அகமண முறையும்

குலத்தை நோக்க புறமண முறையும் வழக்கில் இருப்பதை எங்கெல்ஸ் (Friedrich Engels, 2011) விளக்குகிறார்.

குலங்கள் எப்போதும் புறமணத்தை ஆதரிப்பவையாகவே இருந்தன. ஒருபோதும் அகமணத்தை ஆதரிப்பவையாக இல்லை. வரலாற்றில் எங்குமே புறமண இனக்குழுக்கள் இருந்ததாகத் தெரியவில்லை என்கிறார் எங்கெல்ஸ் (Friedrich Engels, 2011) எனில் குலங்கள் என்பவைச் சமூகத்தில்

நிலைத்திருக்க புறமணமுறை அவசியமாகிறது. இந்தியச் சமூகத்தில் குலங்களிடையே புறமணமுறை நிலவியதா? அது சமூத்தின் ஏற்பினைப்பெற்றதா? என்பதனைக் காணவேண்டியிருக்கிறது.

இந்தியாவில் மிகவும் சிக்கலுக்குரிய அமைப்பாகச் சாதியிருக்கிறது. இன்றளவும் அதன் தோற்றத்திற்கான சரியான காரணங்களைப்பற்றிய விவாதங்களும் ஆய்வுகளும் தொடர்கின்றன. சாதிகளைப் பற்றிய பகுப்பாய்வினை நிகழ்த்திய அறிஞர்கள் தங்களுக்குள் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தாலும் அடிப்படையாக ஒன்றில் ஒன்றுபடுகின்றனர், அது அகமணமுறை என்பதாகும் (Gail Omvedt, 2019). சாதிகளின் தோற்றம் பற்றிய ஆரம்பகால ஆய்வில் கவனத்திற்குரியது அம்பேத்கரால் எழுதப்பட்ட 'இந்தியாவில் சாதிகள்: அவற்றின் அமைப்பியக்கம், தோற்றம், வளர்ச்சி' (Castes in India: Their mechanism, genesis and development- 1916) என்கிற கட்டுரை (Ambedhkar, 2019). இதில் சாதிகள் நிலவுவதற்கு அகமண முறையைக் காரணமாகக் காட்டுகிறார். சாதி என்பதை ஒரு குழுவாகவும் குலமாகவும் நெஸ்பீல்டு, சர்.எச். ரிஸ்லி போன்றோர் குறிப்பிடுவதை அம்பேத்கர் எடுத்துக்காட்டுகிறார் (Ambedhkar, 2015).

சாதிகளைக் குலங்களாகக் கொண்டால் புறமண முறை நிகழ்வதே இயல்பு, ஆனால் இந்தியச் சமூகத்தில் இதற்கு நேர் மாறாக நடந்திருப்பதைக் காண்கிறோம். "அக மணமுறை என்பது இந்தியர்களுக்கு அந்நியமானது என்ற உண்மையை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். இந்தியாவின் பல்வேறு கோத்திரங்களும் புறமண வழக்கத்தைக் கொண்டவைதான். குறியீடுகளைக் குலமரபுச் சின்னங்களாகக் கொண்ட குழுக்களும் (totemic) இத்தன்மையனவே. இந்திய மக்களைப் பொறுத்தமட்டில் புறமணம் என்பது எவரும் மீளத் துணியாத ஒரு சமயக் கோட்பாடாகவே உள்ளது. இந்த இயல்பின் காரணமாக, சாதிகளுக்குள் அகமண வழக்கம் கடைபிடிக்கப்பட்ட போதிலும் சாதிகளின் தன்னின மக்களுக்குள்ளே புறமணம் என்பது எவரும் மீளத் துணியாத ஒரு சமயக் கோட்பாடாகவே உள்ளது. மேலும் அகமண வழக்கத்தை மீறியதற்காக விதிக்கப்படும் தண்டங்கள் புறமண வழக்கத்தை மீறியதற்காக விதிக்கப்படும் தண்டங்களை விட மிகக் கடுமையானவை. புறமணம் என்றாலே கலந்து ஒன்றாவது என ஆகின்றது. இதனால் புறமணத்தின் விளைவாகச் சாதி என்பது இருக்க இயலாது என்பதை அறிவீர்கள். ஆனால் நம்மிடையே சாதிகள் உள்ளனவே; இது எதனால்? ஆய்ந்து பார்த்தோமானால் இந்தியாவைப் பொறுத்தமட்டில் சாதிகளின் படைப்பு என்பது புறமணத்தை விட அகமணத்திற்கு உயர்வான இடம் அளிக்கப்பட்டதன் விளைவு என்பது புலப்படும். எனினும், வழக்கமாகப் புறமணம் செய்துவந்த கூட்டத்தார் மீது தன் இனத்திற்குள்ளேயே மணம் புரியும் அகமண வழக்கத்தைப் புகுத்தியது சாதியைப் படைப்பதற்கு இணையான செயலாக அமைந்துவிட்டது இதுவே, துயரார்ந்த பிரச்சனையாகும்" (Ambedhkar, 2015) என்கிறார் அம்பேத்கர்.

குலங்களுக்கிடையே அகமண முறையும், தன் இனம் சார்ந்து புறமண முறையும் இந்தியாவில் உலகில் வேறெங்கும் இல்லாத சாதிய அமைப்பை உருவாக்கியிருப்பதை அம்பேத்கர் தெளிவுபடுத்துகிறார். உலகம் வர்க்கச் சமூகமாகப் பிளவுபட்டுள்ள போது, இந்தியா மட்டும் சாதியச் சமூகமாகப் பிளவுபட்டுள்ளதற்கு இந்த முரண்பட்ட அகமண முறையும் முக்கியமான காரணமாகலாம்.

இந்தியாவில் அகமணமுறைப் போற்றுதலுக்கும் புறமணமுறை எதிர்ப்பிற்கும் உள்ளாகியிருப்பதை இது உணர்த்தி நிற்கிறது. இதற்கு அகச்சான்றுகள் ஏதேனும் உள்ளதா? என்று தேடுகிறபோது நம் முன்னே தொல்காப்பியம் சில தரவுகளை அளிக்கிறது. அதனை ஆராய்வது மேற்கண்ட கூற்றை உறுதிப்படுத்த உதவும்.

## தொல்காப்பியம் காட்டும் காமக்கூட்டம்

தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள களவு மணமுறை அம்பேத்கர் குறிப்பிடும் இந்தியச் சமூகம் பின்பற்றும் குலங்களுக்கிடையிலான அகமணமுறையா? இல்லை எங்கெல்ஸ் கூறிய படி உலகெங்கிலும் நிகழ்ந்த குலங்களுக்கிடையிலான புறமணமுறையா? என்கிற கேள்விக்கு விடை தேட வேண்டியிருக்கிறது.

தொல்காப்பியர் 'ஒத்த தன்மையுள்ள ஓர் ஆணும் பெண்ணும்' (நூற்பா 93) எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு காமக்கூட்டத்தில் ஈடுபடுவதாகக் கூறுகிறார். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் களவுக் குறித்து விளக்கவந்த தொல்காப்பியர் களவு என்பதனை

"இன்பமும் பொருளு மறனு மென்றாங்

கன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்

காமக் கூட்டம் காணுங் காலை

மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுட்

டுறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பே" (நூற்பா 92) என்கிறார்.

களவியல் குறித்த முதன் நூற்பாவிலேயே 'களவு' என்று கூறாமல் 'காமக்கூட்டம்' என்று கூறுவதன் பின்னணி ஆராயத்தக்கது. இதனை ஆய்ந்த சிலம்பு நா. செல்வராசு தொல்காப்பியர் களவு எனச் சுட்டும் இடங்களை எடுத்துக்காட்டுகிறார். அதனைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக்கொள்ளலாம்.

1. வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின் ஆதந்து ஓம்பல் மேவற்றாகும் (நூற்பா 57)
2. வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல் ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல் நோக்குவ எல்லாம் அவையே போறல் மறத்தல் மயக்கம் சாக்காடு என்றச் சிறப்புடை மரபினவை களவென மொழிப (நூற்பா 100)
3. வரைவு தலை வரினும் களவு அறிவுனும் (நூற்பா 111: 25)
4. களவு அலராயினும் காமம் மெய்ப்படுப்பினும் (நூற்பா 115: 1)
5. அம்பலும் அலருங் களவு வெளிப் படுத்தலின் ஆங்கதன் முதல்வன் கிழவனாகும் (நூற்பா 139)
6. களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி அலமரல் உள்ளமொடு அளவிய இடத்தும் (நூற்பா 146: 18,19)
7. களவும் கற்பும் அலர் வரைவின்றே (நூற்பா 162)
8. ஆம்பலும் அலரும் களவெளிப் படுக்குமென்று அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும் (நூற்பா 225: 3, 4)

மேற்கண்டவற்றில் 'களவு' என்ற சொல் நூற்பா 146, 100 தவிர ஏனைய இடங்களில் 'அலரோடு' சேர்த்துக் கூறப்பட்டுள்ளதிலிருந்து, அலர், அம்பல் மூலம் பிறரறியாமல் ஒழுகிவந்த இருவருக்கிடையிலான களவு (காதல்) வெளிப்பட்டதைக் குறிக்க களவு என்கிற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதை அறிய முடிகிறது. ஓரிடத்தில் ஆநிரை கவர்தலோடு (நூற்பா 57) களவு என்பது தொடர்பு படுத்தப்பட்டுள்ளதையும் காணமுடிகிறது (Selvarasu, 2016). இவற்றிலிருந்து பிறரறியாமல் இருவர் ஒழுகும் அகவாழ்வினைக் களவு என்ற சொல் சுட்டி நிற்பதைக் காணமுடிகிறது.

அடுத்ததாகக் காமக்கூட்டம் என்கிற சொல் பயன்படுத்தியுள்ளதன் பின்னணியை ஆராயவேண்டியிருக்கிறது. காமக்கூட்டம் என்பதற்கு உரையெழுதிய இளம்பூரணர் "காமப்புணர்ச்சி யெனினும், இயற்கைப் புணர்ச்சி யெனினும், முன்னுறு புணர்ச்சி யெனினும், தெய்வப் புணர்ச்சி யெனினும் யொக்கும். இவையெல்லாம் காரணப்பெயர். அஃதாவது, ஒத்தார் இருவர் தாமே கூடும் கூட்டம்" என்பார் (Ilampurananar, 2005).

காமக்கூட்டம் என்பதற்கு நச்சினார்க்கினியர் "புணர்தலும் புணர்தனிமித்தமு வெனப்பட்ட காமப் புணர்ச்சியை ஆராயுங்காலந்து" என்று பொருள் உரைத்துள்ளார் (Nachinarkiniyar, 2007).

தொல்காப்பியர் இரண்டு இடங்களில் 'காமத்திணை' (நூற்பா 108), 'காமக்கூட்டம்' (நூற்பா 119) எனும் சொல்லாட்சிகள் முறையே 'காம ஒழுக்கம்', 'இயற்கைப்புணர்ச்சி' என்கிற பொருட்பட பயன்படுத்தி உள்ளார். இதன்வழியாகத் தொல்காப்பியர் களவு என்கிற சொல்லினை மேற்கண்ட இடங்களில் பயன்படுத்தாது மட்டுமின்றி அதற்கு இணையாகக் காமத்திணை, காமக்கூட்டம் என்கிற சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார்.

தொல்காப்பியரும் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் காமக் கூட்டம் என்பதனை உள்ளம் விரும்பிய இருவர் காமத்திற்காகக் கூடும் கூட்டம் (புணர்ச்சியில் ஈடுபடுவது) என்கிற பொருளில் வழங்கியிருப்பதைக் காணமுடிகிறது.

காமக்கூட்டம் என்பதில் காமம் என்பது இன்பத்தினைச் சுட்டிநிற்கிறது. இதிலுள்ள கூட்டம் என்கிற சொல் கவனிக்கத்தக்கதாய் உள்ளது. “கூட்டம் என்ற சொல்லாட்சி கூடு, கூடுதல் என்ற விரிவாக்க அடிப்படையில் புணர்ச்சியைச் சுட்டியதாகக் கருதமுடியும். மற்றுமொரு நிலையில் குழுவாக இயங்கிய ஓர் கூட்டத்தையும் கூட்டம் என்ற சொல் குறித்திருக்கலாம். பழங்குடியினர் தம் இளையோர் கூட்டத்தில் ஆண்களும் பெண்களும் குழுவாகக் கூட்டமாகத் தங்கி உறவு கொண்டமையை இங்கே சுட்டுதல் வேண்டும். இந்த அடிப்படையில் காமக்கூட்டம் என்பது காமக்குழு என்ற பொருளிலும் வழங்கியிருக்க வாய்ப்புண்டு” என்கிறார் சிலம்பு நா. செல்வராசு (Selvarasu, 2016). இதன்படி காமக்கூட்டம் என்பது இருவருக்கிடையே நிகழ்ந்த புணர்ச்சியைச் சுட்டாமல் (களவு), எங்கெல்ஸ் குறிப்பிடும் குழுமணம் (குழுப்பாலுறவு) (Friedrich Engels, 2011) என்கிற வரலாற்றுக்கு முந்தைய காலத்தில், பாலுறவுக்குழுக்களிடையே நிகழ்ந்த சுதந்திரப் புணர்ச்சியின் பாற்பட்ட சொல்லாகவும் சமூக முறைமையாகவும் இருப்பதை அனுமானிக்க முடிகிறது.

அவ்வாறெனில் தொல்காப்பியம் குறிப்பிடும் காமக்கூட்டத்தினை வரலாற்றுக்கு முந்தைய காலக்கட்டத்தில் நிலவிய குழுப்பாலுறவு முறையாகக் கொள்ள இயலுமா? என்றால் இயலாது. தொல்காப்பியம் குறிப்பிடும் காமக்கூட்டம் என்பது வரலாற்றுக்காலத்தில் தோன்றிய இருவருக்கிடையிலான கட்டுப்பாடுகள் மிகுந்த ஒருதார மணக்குடும்ப வடிவத்தின்பாற்பட்டுள்ளதைத் தொல்காப்பியக் களவியல் உணர்த்தி நிற்கிறது.

தனிமனிதர் என்ற முறையில் இருவர் சந்திப்பதும், புணர்வதும், பின்பு பிரிவதும் ஆதிகாலத்திய இயல்பு. இங்குப் புணர்வதைத் தாண்டி பிற்காலத்திய குடும்பம்சார் கருத்து வழியிலான உறவுகளுக்கு அவசியம் கிடையாது. உற்பத்தி முறையின் வளர்ச்சியினால் ஏற்பட்ட உபரி, சமூகத்தில் தனிவுடைமைக்கும் தந்தை ஆதிக்கத்திற்கும் வழியமைக்கிறது. இந்த மாற்றங்கள் பாலுறவிலும் பல்வேறு தடைகளையும் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்துகிறது. குல அமைப்பில் குழுவாக இணைந்து வாழ்வதும் புணர்வதுமான வாழ்நிலை, தனிவுடைமையின் தோற்றத்தினால் தனித்தனிக் குடும்பங்களாகச் சிதையத் தொடங்குகிறது. சமூகத்தில் நிகழ்ந்த இந்தப்புறவயமான பொருளாதார மாற்றங்களின் வழியாகப் பாலுறவின் இறுதி வடிவமாக ஒருதாரமணம் (ஒரு கணவ மணம்) உருவாகியிருப்பதை எங்கெல்ஸின் குடும்பத்தின் தோற்றம் பற்றிய ஆய்வும், சமூக மானுடவியல் ஆய்வுகளும் எடுத்துக்காட்டுகின்றன. ஒருதாரமணம் சமூகத்தில் தோன்றிய தனிவுடைமையையும் தந்தை ஆதிக்கத்தையும் நிலைத்திருக்கச்செய்ய பண்பாட்டு வழியில் களவு (காதல்), கற்புப் போன்ற பண்பாட்டுக் கருத்தாக்கங்களைச் சமூகத்தில் உருவாக்கியிருக்கிறது.

இதன்வழியாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் காமக்கூட்டம் எனும் சொல்லாட்சியில் பழமையின் எச்சம் வெளிப்படுகிறபோதும், அது தந்தை ஆதிக்கத்திற்கும் தனிவுடைமைக்கும் உதவுகிற வகையில் நவீன கருத்துவழியிலான களவினை (காதல்) வளர்த்தெடுத்திருப்பதைத் தொல்காப்பியக் களவியல் வழி அறியமுடிகிறது. அவ்வாறெனில் காமக்கூட்டம் என்பது தனது பழைய பொருண்மையையும் (குழுப்பாலுறவு) சமூக மதிப்பியல் நிலைப்பாடுகளில் இருந்தும் பிறழ்ந்து, புதிய பொருளான களவு (ஒத்தார் இருவர் கூடுவது) என்று வழங்குவதைக் காணமுடிகிறது. காமக்கூட்டத்தின் சமூக நடைமுறை பிற்காலத்தில் களவு என்றானதற்கான காரணங்களை ஆராய வேண்டியிருக்கிறது.

## தொல்காப்பியக் களவும் புறமணமுறையும்

வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் பால்வயதை எட்டிய எவரும் எத்தகைய தடையுமின்றி பாலுறவில் ஈடுபட்டு வந்த சமூக ஒழுகலாறுகள் இனியும் தொடர்வதற்கில்லை (Friedrich Engels, 2011). பொதுவுடைமைச் சமூகத்தில் வழக்கிலிருந்த காமக்கூட்டம் என்பது குல மரபின் குழுப்பாலுறவு என்கிற நிலையிலிருந்து மாறி, தனிவுடைமைச் சமூகத்தில் தனிப்பாலுறவான (ஓர் இணை) களவு என்பதாக மாற்றம் பெற்றுள்ளது. குழுப்பாலுறவில் இருந்த சமூக வழக்காறுகள் மறைந்து தனிப்பாலுறவான

களவில் ஈடுபடுவதற்குச் சில கட்டுப்பாடுகளும் நெறிகளும் சமூகத்தில் தோன்றுகின்றன. இதனை 'ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப' (நூற்பா 93) என்று தொல்காப்பியம் எடுத்துக்காட்டுவது கவனிக்கத்தக்கது. இந்த ஒத்த தன்மைகள் எவை என்பதற்கு

"பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ

டுருவி நிறுத்த காம வாயி

னிறையே யருளே யுணர்வொடு திருவென

முறையுறந் கிளந்த வொப்பினது வகையே" (நூற்பா 273)

என்ற தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில் வரும் நூற்பாவை இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் எடுத்துக்காட்டுகின்றனர். இதில் கணவன் மனைவி ஆவதற்கும் ஒருவர் காதலிப்பதற்கும் பத்து வகையான பொருத்தங்கள் இருக்க வேண்டும் என்கிறது தொல்காப்பியம். அதில் முதலிரண்டு பொருத்தங்கள் முக்கியமானவை, அவை

- பிறப்பும்
- குடியும் ஆகும்.

இவை இரண்டும் இக்கட்டுரையின் கருதுகோளின் மீது புதிய வெளிச்சங்களைப் பாய்ச்சுகின்றன. இவற்றிற்கு விளக்கம் அளிக்க வந்த இளம்பூரணர் "பிறப்பாவது, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர், குறவர், நுளையர் என்றாற்போல வருங் குலம். குடிமையாவது அக் குலத்திலுள்ளார் எல்லாருஞ் சிறப்பாக ஒவ்வாமையின் அச் சிறப்பாகிய ஒழுக்கம் பற்றிய குடிவரவைக் 'குடிமை' என்றார்" என்கிறார் (Ilampurananar, 2005). இளம்பூரணர் வருணாசிரம மற்றும் திணை வாழ்நிலையைக் குலமாகக்கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது.

அடுத்துப் பேராசிரியரின் உரை கவனிக்கத்தக்கது. அவர் "குடிமையொடு பிறப்பிடை வேற்றுமை யென்னையெனின், பிறப்பென்பது குடிப்பிறத்தல்; அதற்குத்தக்க ஒழுக்கங் குடிமை எனப்படும்" என்கிறார் (Perasiriyar, 2007). இங்கும் ஏறத்தாழ குடி என்பது ஒத்த ஒழுக்கங்களைப் பின்பற்றும் ஒரு குழு என்பதான பொருள்பட நிற்கிறது.

"இது பணக்காரர் ஏழை என்ற பாகுபாடோ, வருணாசிரம வேற்றுமையோ அன்று, ஒரு குடிவழி - தாத்தா முதல் பேரன்வரை, சுற்றம் அமைவது குலம்" என்கிறார் தமிழண்ணல் (Tamizhannal, 2012). ஆனால் தமிழண்ணலின் கூற்றுப் பொருந்தவில்லை. தொல்காப்பியக் காலக்கட்டத்தில் வருணாசிரமம் தோன்றியதற்கான கூறுகள் உள்ளதை மரபியலில் உள்ள பதிவுகளிலிருந்து (நூற்பா 625 - 639) அறிய முடிகிறது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்கிற நால்வருணங்கள் குறித்தும் அவர்களுக்கே உரிய தொழில்கள், புறச்செயற்பாடுகள் குறித்தும் விரிவான விவரனைகளை அப்பகுதிக் கொண்டுள்ளது. அத்தோடு பிறப்பே குடிமை…என்கிற நூற்பாவில் (273) பிறப்பு என்பதற்கு உரையெழுதிய இளம்பூரணர் வருணாசிரம மற்றும் திணை வாழ்நிலையைக் குலமாகக்கொண்டிருப்பதிலிருந்து தொல்காப்பியர் காலத்தில் வருணாசிரம ஏற்றத்தாழ்வுகள் இருப்பது உறுதியாகிறது.

தமிழ்ச்சமூகமும் சாதியச்சமூகமாக மாறி இன்றளவும் நிலைத்திருப்பதைக் காண்கிறோம். பிறப்பின் அடிப்படையிலேயே வருணாசிரம அடிப்படையிலான சாதிமுறை இன்றளவும் தமிழ்ச்சமூகம் உள்ளிட்ட இந்தியச் சமூகத்தில் பேணப்பட்டு வருகின்றது. பிறப்பையும் குடியையும் ஏற்றதாழ்வாகக் கருத இடமில்லை என்பது பொருந்தவில்லை என்றாலும், அதனை தாத்தா முதல் பெயரன் வரை உள்ள ஒரு உறவுக் கூட்டமாகத் தமிழண்ணல் கூறுவது குலம் குறித்த எங்கெல்ஸின் கூற்றோடு பொருந்துவதாக உள்ளது.

இதன்படி இளம்பூரணர், பேராசிரியர், தமிழண்ணல் ஆகியோர் பிறப்பு, குடி என்பதற்கு வழங்கியுள்ள மேற்கண்ட கருத்துகள் 'குழு மணத்தில் ஒருதாய் வழியில் பிறந்தவர்கள் தங்களுக்குள் திருமணத் தடை ஏற்பட்டதால், வேறு தாய்வழியில் தோன்றிய கூட்டத்தாருடன் இணைவதால் தோன்றிய மக்கள் கூட்டத்தையே குலம்' எனக்கொள்ளும் எங்கெல்ஸின் (Friedrich Engels, 2011) கூற்றோடு சற்று ஏறத்தாழ ஒத்திருப்பதைக் காணலாம்.

மேற்கண்ட சான்றுகளின் வழியாக இன்றைய நிலையில் குலம் என்பதை ஒத்த தன்மையுள்ள பழக்க வழக்கங்களைப் பின்பற்றும் ஒரு தாய்வழியில் அல்லது பிந்தைய தந்தைவழியில் தோன்றிய பல தலைமுறை உறவுகள் இணைந்த கூட்டமாகக் (குலம்) கருதலாம். இதனைச் சாதியாகவும் கொள்ளலாம்.

இதிலிருந்து 'பிறப்பு, குடி' என்பன குலங்களைக் குறிப்பதாகக் கொண்டால், கிழவனும் கிழத்தியுமாகிய ஆணும் பெண்ணும் ஒத்த குலங்களைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமென்பது உறுதியாகிறது. இதன் வழியாகத் தொல்காப்பியம் குலங்களுக்கிடையேயான புறமண முறையைத் தடைசெய்து அகமண முறையை வலியுறுத்துவதை இந்த நூற்பா குறிப்பதாகக் கொள்ள இடமுண்டு.

தொல்காப்பியம் கூறும் பிறப்பு, குடி ஆகியவற்றின் அடிப்படையிலான அகமணமுறை அம்பேத்கர் உள்ளிட்ட அறிஞர்கள் சொல்வதைப்போல தமிழ்ச் (இந்திய) சமூகத்தில் பொருளாதார உற்பத்தியின் அடியாகத்தோன்றிய சாதியப் பாகுபாடுகள் உருவாகி நிலைத்திருக்கக் காரணமாக இருந்திருப்பதைக் காணமுடிகிறது. "இந்தியச்சூழலில் குறிப்பிட வேண்டுமானால் சாதி என்பது ஓர் அகமணக்குழுவாகும். ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் அவர்தம் சாதிக்குள் மட்டும்தான் திருமணம் செய்து கொள்கின்றனர். வேற்றுச் சாதியினரோடு பெரும்பாலும் திருமணம் செய்துகொள்வதில்லை. அந்நிலையில் அமையும் திருமணமே அகமணம் என்று கூறப்படும். அவ்வாறே மேலைநாட்டு வர்க்கச் சமுதாயங்களில் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினர் அவர்களின் வர்க்கத்திற்குள்ளேயே திருமணம் செய்துகொள்கின்றனர். அவ்வகைத் திருமணமும் அகமணமுறையைக் கொண்டதே. பழங்குடிச் சமுதாயம் ஒவ்வொன்றும் ஓர் அகமண சமுதாயமாகும். எடுத்துக்காட்டாக, தோடர் பழங்குடியைச் சேர்ந்தவன் அவனுடைய பழங்குடியைச் சேர்ந்த ஒருத்தியையே மணம்செய்துகொள்கிறான். அவர்கள் வாழும் பகுதிகளில் உள்ள படகர், இருளர், கோத்தர் போன்ற பழங்குடிகளுடன் மணம் செய்துகொள்வதில்லை" என்கிறார் பக்தவத்சலபாரதி (Bakthavatchala Bharathi, 2014). இவ்வாறாகச் சாதியின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதன் நிலைப்பேற்றில் அகமணமுறை என்பது தவிர்க்க முடியாத இடத்தினையும் மீறமுடியாத சமூகவிதியாகவும் இருப்பதனைச் சமூகவியல் மற்றும் மானுடவியல் ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன.

குலங்களுக்கிடையே அகமண முறையை வலியுறுத்துவதனால் அனைவரும் தங்கள் குலங்களுக்கிடையே மட்டும் திருமண உறவு கொள்வது சமூக விதியாகிறது. சமூக விதியைக் கட்டிக்காக்கப் பெற்றோர் இசைவு மணங்கள் (கற்பு) அவசியமாகின்றன. பெற்றோரின் இசைவினைப் பெறாமல், அவரறியாமல் ஆணும் பெண்ணும் புணர்ந்து வாழ்வது களவு எனவும், ஒரே குலமாக இருப்பின் களவிற்குப்பின்னர் பெற்றோர் இசைவினைப் பெற்று அவரறிய வாழ்வது கற்பு என்றும் வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால் பெரும்பான்மையானவை பெற்றோரால் பார்த்துக்கூட்டுவிக்கும் கற்புமணங்களாகவே உள்ளதைக் காணும்போது ஒத்த குலங்களுக்கிடையில் களவு என்பது ஏற்கப்பட்டிருப்பதற்கான கூறுகள் மிகக் குறைவு. கற்புமணம் சமூக ஏற்பினைப்பெற்று வரும் காலங்களில் களவு மணங்கள் எதிர்ப்பிற்குள்ளாகி நாளடைவில் அவை முற்றிலும் தடைசெய்யப்பட்டிருக்கிறது. கற்பு மணங்கள் சமூகத்தில் ஏற்கப்பட்டிருந்தாலும், ஆங்காங்கே களவு நிகழ்வதும், களவு கற்பாக மாறவேண்டும் என்கிறபோது எதிர்ப்புகளும் அதனை மீறி திருமணங்கள் நிகழ்ந்திருப்பதையும் தொல்காப்பியத்தில் உள்ள உடன்போக்குக் குறித்தான பதிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. தொல்காப்பியர் கற்பியலில் இரண்டு வகையான மணமுறைகளைப் பற்றிப்பேசுகிறார். முதலில் கற்பென்பதற்கு விளக்கம் அளிக்க வந்த தொல்காப்பியர்

'கற்பெனப் படுவது கரணமொடு புணரக் கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக் கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே' (நூ.143) என்கிறார். இதற்கு நேர்மாறாகப் பெற்றோரின் இசைவின்றி நடைபெறும் மணமான உடன்போக்கு மணங்களைக் 'கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே புணர்ந்துடன் போகிய காலை யான' (நூ.143) என்கிறார். மனமொப்பிய இருவர் உறவினர்களுக்குத் தெரியாமல், பெற்றோர்களின் இசைவின்றி ஏன் மணம் செய்துகொள்ளவேண்டும்? பெற்றோர்களின் இசைவின்மைக்கான காரணங்கள் என்ன? இவற்றிற்கான காரணங்களைத் தேடினால், அது குலங்களுக்கிடையேயான அகமணமுறை என்கிற சமூக விதியை மீறிய புறமணத்திற்கான கூறுகளாக இருப்பதைக் காணமுடிகிறது. சங்க இலக்கியங்களுள் வேறொரு குலத்தைச்

சார்ந்தோரிடையே நிகழும் காதல் குறித்த பதிவுகள் (குறுந்தொகை. 40) இடம்பெற்றுள்ளதையும் காணமுடிகிறது.

“வேறொரு குழுவில் அல்லது குலத்தில் பெண்ணைக் காதலித்து மணத்தல் என்பதே களவியலாகத் தமிழிலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது” என்கிற சிலம்பு நா. செல்வராசுவின் களவிலக்கியங்கள் குறித்தான கூற்றும் களவு என்பது ஒத்த குலங்களில் நிகழாமல் வெவ்வேறுபட்ட குலங்களுக்கிடையிலான புறமணமுறையின் அடிப்படையில் அமைந்திருப்பதை உறுதியாக்குகிறது (Selvarasu, 2016). இவ்வாறு மாறுபட்ட குலங்களுக்கிடையில் நடக்கும் களவு, கற்பாக மாற்றம் பெறுவதற்குச் சமூகம் இசையாத காரணத்தினால், உடன்போக்கு மணங்கள் உருவாகின்றன. தலைவனுக்கும் தலைவிக்கும் மணவாழ்க்கையின் தொடக்கமாக இருக்கும் உடன்போக்கு மகிழ்ச்சிக்குரியதாக இல்லாமல் துயரம் மிக்கதாக இருப்பதனை உடன்போக்குக் குறித்த சங்கப்பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. “உடன்போக்குப்பாடல்களைப் பாலைத்திணையுள் சேர்த்தமைக்கும் அப்பாடல்களில் கொடும் பாலை நில வண்ணனைகளை இடம் பெறச் செய்தமைக்கும் ஆழமான சமூகவியல் காரணங்கள் இருத்தல் வேண்டும். சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற 122 உடன்போக்குப் பாடல்களும் துயரத்தை வெளிப்படுத்துவனவே, ஒருபாடலில் கூட மகிழ்ச்சி ததும்பும் கூறு இடம்பெறாதது கவனிக்கத்தக்கது” (Selvarasu, 2016) சங்க இலக்கியங்களில் உடன்போக்குக்குறித்தான பாடல்களில் (நற்றிணை 02, ஐங்குறுநூறு 373, குறுந்தொகை 56, கலித்தொகை 05) உடன்போக்கின் கண் பெருந்துன்பங்கள் நிகழ்வதைக் காணமுடிகிறது. உடன்போக்கு மேற்கொள்ளும் காதலர்மீது போர் தொடுத்த நிகழ்வினை நற்றிணை 262ஆம் பாடல் காட்டுகிறது. இதன்வழியாக “உடன்போக்கு உள்ளிட்ட சுதந்திரகாதல் அல்லது களவுக்காதல் பிற்காலத் தமிழகத்தில் தடை செய்யப்பட்டது. ஆண்தலைமைச் சமூகமாற்றமும், வாரிசுரிமையும், ஒருதாரமணமுறையின் ஆதிக்கமும் களவுக்காதலை முற்றும் தடைசெய்தன. சுதந்திரகாதல் வாழ்க்கைமுறையைக் களவு என்று பெயர் சூட்டி விலக்கிப் பெற்றோர் இசைவுடன் கூடிய கற்பு மண வாழ்க்கை வற்புறுத்தப்பெற்றது” (Selvarasu, 2016). இவை களவு மற்றும் உடன்போக்கு மணங்கள் சமூக எதிர்ப்பிற்கு உள்ளாகியிருப்பதைத் தகுந்த சான்றுகளுடன் எடுத்துக்காட்டுகிறது. இன்றளவும் சமூக வழமையாகப் சாதி, வர்க்கம் ஆகியவற்றின் அடிப்படையில் பெற்றோர்கள் மற்றும் சமூகத்தால் மறுக்கப்படுகின்ற காதலர்கள் உடன்போக்குச் சென்று மணமுடிப்பதைக் காண்கிறோம்.

இவ்வாறு சமூக விதிப்படி ஒத்த குலத்தில் இருப்போரையே மணம் செய்து கொள்ள வேண்டும். இதற்கு மாற்றாக வேறொரு குலத்தில் இருக்கும் பெண்ணின் மீது ஆண் ஒருவன் காதல் கொள்வது தடையை மீறுவதாகிறது. தடையை மீறி நடக்கும் காதல் பிறர் பொருளைக் களவு செய்வதற்கு ஒப்பானதாகக் கருதப்பட்டிருப்பதால் அந்த மணத்தைக் களவு என்று தொல்காப்பியர் குறித்திருக்கலாம்.

தனிவுடைமையின் தோற்றத்தினால் சமூகத்தில் நிகழ்ந்த புறவயமான மாற்றங்களினால் ஒரு காலத்தில் சமூக வழக்காற்றில் ஏற்கப்பட்ட களவு நாளடைவில் சமூக ஏற்பின்மைக்கு உள்ளாகிறது. ஆனால் அத்தகைய களவு மணங்கள் சமூகத்தில் ஆங்காங்கே நிகழ்வதையும் தொல்காப்பியப்பதிவுகள் சுட்டிநிற்பதை உடன்போக்கு மணங்கள் எடுத்துக்காட்டுகின்றன. களவு என்பது அறமுடையதாகவும் அது ஆணும் பெண்ணும் பிறரறியாது கூடி வாழ்வது என்கிறார் இளம்பூரணர் (Ilampurananar, 2005) அதன்படிக் களவு என்பது ஒத்த தன்மையுள்ள ஒரே குலத்தைச் சார்ந்த ஆணும் பெண்ணும் எதிர்ப்பட்டுக் கூடுகிற போது அறமாக ஏற்கப்பட்டிருக்கலாம். அத்தகைய அறமுடைய களவு தோழியால் பின்னர் கற்பு மணமாக்கப்படுகிறது. அது சமுதாய ஒப்புதல் பெற்ற காதலாக ஏற்கப்படுகிறது. இதற்கு நேர்மாறாக வேறொரு குலத்து ஆடவனும் பெண்ணும் காதல் கொள்கிறபோது அது அறமற்ற களவாகவும் சமூக எதிர்ப்பிற்குள்ளாவதுமாக மாறிப்போகிறது. களவில் ஏற்படும் இத்தகைய நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வாக அகமணமுறைச் சமூகத்தில் தோற்றம் கொள்கிறது. இதனைப் பேணிப் பாதுகாக்க சமூகத்தில் கற்பு மணம் வழக்கத்திற்கு வந்திருக்கிறது. அகமணமுறையைப் பாதுகாக்க உண்டான கற்புமணம் நாளடைவில் சமூகத்தின் முழுமுதல் மணவடிமாக மாறியதனால், ஆங்காங்கே நிகழும் களவு கற்பாக மாற்றப்பட வேண்டிய சமூக நிர்பந்தம் எழுகிறது, களவு புறமணமுறையில் இருப்பதனால் அவை பெற்றோரின் இசைவின்றி பல்வேறு எதிர்ப்புகள் மற்றும் துன்பங்களுடன் உடன்போக்கின்வழியாகக் கற்பாக்கப்படுகிறது. இன்றளவும் அகமணமுறையை மீறி (சாதி விட்டு சாதி) காதல் மற்றும்

உடன்போக்கு மணங்கள் நடைபெறுகிறபோது அவை கடுமையான எதிர்ப்பிற்குள்ளாகிறது. புறமணமுறையின் உச்சபட்ச எதிர்ப்பின் நீட்சியாகத்தான் சமூகத்தில் ஆணவக்கொலைகள் இன்றளவும் நிகழ்ந்த வண்ணமுள்ளன. இவையாவும் புறமணங்களின் எதிர்ப்பிற்கும் அகமணங்களின் ஏற்பிற்குமான சமூக நடைமுறையாக இன்றும் நம் முன்னே காட்சியளிக்கும் சான்றுகளாக உள்ளன.

## முடிவுரை

'ஒத்த கிழவனுங் கிழத்தியும் காண்ப' என்கிற தொல்காப்பியக் கூற்றின்வழிப் பெறப்படும் பத்துவகையான பண்புகளில் முதன்மையானது 'பிறப்பு' மற்றும் 'குடி' என்பன. பிறப்பும் குடியும் பாலுறவுக் கொள்ள வேண்டிய இருவர் ஒரே குலத்தைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதனை உறுதிசெய்கிறது. இது குலங்களுக்கிடையே அகமணமுறை நிலவியிருப்பதை எடுத்துக்காட்டுகிறது. வழக்கில் இருந்த களவு என்கிற புறப் பாலுறவு முறை பின்னர் சமூக எதிர்ப்பைப் பெற்று படிப்படியாகப் புறமணமுறையிலிருந்து அகமணமுறையினை நோக்கிய மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறது. அகமணமுறையின் வலியுறுத்தலின் காரணமாகக் கற்பு என்கிற புதிய பாலுறவு முறைத் தோற்றம் கொள்கிறது. இதன் வழித் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் களவு ஒரே குலத்தில் கொள்ளும் களவு (அகமண முறை) பிறருக்குத் தெரியாமல் புணர்வதால் களவு என்றும், அது சமூக இசைவினைப் பெற்றுக் கற்பாக மாறியிருக்கிறது. வேறொரு குலத்தில் கொள்ளும் களவு (புற மணமுறை) ஒரு குலத்தின் விதியை மீறி புணர்வதால் களவு என்றும், அது சமூக இசைவினைப் பெறாததால் எதிர்ப்புக்கு உள்ளாகியிருக்கிறது. தொல்காப்பியத்தில் களவு மணம் என்பது மேற்கண்ட இரண்டு பொருளிலும் கையாளப்பட்டுள்ளது. இது அகமணமுறையில் நடந்த களவு ஏற்கப்பட்ட அறமாகவும், புறமணமுறையில் நடந்த களவு ஏற்கப்படாத களவாகவும் மாறியிருப்பதை உணர்த்தி நிற்கிறது. தொல்காப்பியத்தில் உள்ள புறமணக் களவு நாளடைவில் அகமணக்கற்பாக மாற்றம் பெற்றுப் புறமணமுறை முற்றிலும் தடைசெய்யப்பட்டிருக்கிறது. களவு மற்றும் உடன்போக்கு உள்ளிட்ட புறமணங்கள் முற்றிலும் சமூக எதிர்ப்பிற்குள்ளாகி அகமணமுறையான கற்பு சமூகவிதியாக மாறியிருப்பதை தொல்காப்பிய 'ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப' என்பது உறுதி செய்கிறது. இது அதன் எதிர்த்திசையில் நிகழ்ந்த புறமணமுறை (களவு) இனியும் தொடர முடியாது என்பதற்கான சான்றாகவும் இருக்கிறது. தமிழ்ச் சமூகத்தில் குலங்களுக்கிடையே புறமணமுறை (களவு) கடியப்பட்டு பெற்றோரால் பார்த்துக் கூட்டுவிக்கும் கற்பு மணமான அகமணமுறை வலியுறுத்தப்பட்டிருப்பதைத் தொல்காப்பிய அகச்சான்றின் வழியாக அறியமுடிகிறது. இந்த அகமணமுறை எங்கெல்ஸ் எடுத்துக்காட்டிய, உலகெங்கிலும் நிகழ்ந்த குலங்களுக்கிடையேயான புறமணமுறை என்பதிலிருந்து மாறியிருக்கிறது. இந்த அகமணமுறை வேறெங்கும் இல்லாத 'சாதி' என்கிற அமைப்பு உருவாகி நிலைத்திருப்பதற்கான வழிவகையை ஏற்படுத்தியிருக்கிறது, இது உயராய்விற்குரியது.

## References

Ambedhkar, B.R., (2015) The Caste system in India, Paavai publications, Chennai, India.

Ambedkar, B.R., (2019) Castes in India : Their Mechanism, Genesis and Development, Delhi, India.

Baktavatchala Bharathi, (2014) panpattu manutaviyal, meyyappan publications, Chidambaram, India.

Friedrich Engels, (2011) The origin of the family, Private property and the State, New century book house, Pvt. Ltd., Chennai, India.

Gail Omvedt (2019) M. K. S. Rajaram (Translator), Class Caste Land, Alaigal publications, Chennai, India.

Ilampurananar, (scholiast), (2005), Tolkaapiya poruladhigaram, Saradha publications, Chennai, India.

Nachinarkiniyar, (scholiast), (2007) Tolkappiyam poruladhigaramum, Nachinarkiniyar vuraium, Munnaindhiyalgal, Part-1, Ganesa Iyyar (editor) International institute of Tamil studies, Chennai, India.

Perasiriyar, (scholiast), (2007) Tolkappiyam poruladhigaramum perasiriyar vuraium, pinnangiyalgal, Part-2, Ganesa Iyyar (editor) International institute of Tamil studies, Chennai, India.

Rajam Krishnan, (2014) Kalandhorum Pen, Kalasuvadu Publications, Nagercoil. India.

Selvarasu, N., (2016) Toltamizhar thirumana muraigal, Kalasuvadu Publications, Nagercoil, India.

Tamizhannal, (2012) Tolkappiyar vilakum thirumana porutham, Tamil perayam, Thiru. Ramasamy Memorial University, Kattankulathur, Kanchipuram, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License